(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 4(1).]**

# பாராளுமன்றத்தின்
# 4 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2026 ஜூலை 17, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2026 ஆகஸ்ட் 04, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

31/2024

கௌரவ சட்டத்தரணி ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையில் இலங்கையில் அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி சந்தர்ப்பங்களின் போது வரையறுக்கப்பட்ட லங்கா சதொச நிறுவனம் அரிசியை இறக்குமதி செய்த சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் மேற்படி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, சதொச நிறுவனத்தினூடாக வேறு நபர்களுக்கும் வியாபாரிகளுக்கும் சட்டத்திற்கு முரணான வகையில் விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

136/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை, மதுவரித் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள மதுபான உரிமங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப பிரதேச செயலக வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அத்தகைய மதுபான உரிமங்களை வழங்கும்போது பின்பற்றப்பட்டுள்ள வழிமுறை யாதென்பதையும்;

(iii) மேற்படி உரிமங்கள் வழங்கப்பட்டதன் மூலம் ஈட்டப்பட்டுள்ள வருமானம் ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்

(iv) மதுபான உரிமம் வழங்கும் வழிமுறை சம்பந்தமாக கடந்த காலத்தில் பாரியளவில் சமூக எதிர்ப்பு எழுந்ததால், அந்த நிலைமையை மாற்றுவதற்கு எடுக்கப்படவுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1450/2025

கௌரவ சாணக்கியன் இராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிழக்கு மாகாணத்தில் மாவட்ட ரீதியாக பணியாற்றும் 'கால்நடை தடுப்பூசி ஏற்றுபவர்களின்' எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அம்மாகாணத்திற்கு மேற்படி பதவிக்குத் தேவைப்படும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2018 ஆம் ஆண்டில் நீர் வெறுப்பு நோயை கட்டுப்படுத்தும் செயற்றிட்டத்தின் கீழ் 'நீர் வெறுப்பு நோய் ஒழிப்பு உதவியாளர்' பதவிக்கு அமய அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களுள், 2019 ஆம் ஆண்டில் 'கால்நடை தடுப்பூசி ஏற்றுபவர்களாக' அமய அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வகையில் அமய அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்ட ஊழியர் களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா;

(ஆ) இன்றேல், ஏன்?

2042/2026

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வுபெற்ற) பிரகீத் மதுரங்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ரக்னா பாதுகாப்பு லங்கா நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் யாது;

(ii) ‘ரக்னா பாதுகாப்பு லங்கா கோபுரத் திட்டம்’ எனும் பெயரில் வணிக அலுவலகத் தொகுதியொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளதா;

(iii) அவ்வாறாயின், அது ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு மற்றும் அதற்கு அனுமதி அளித்தவர்கள் யாவர்;

(iv) அத்திட்டத்திற்காக முதலீடு செய்யப்பட்டுள்ள தொகை, முதலீட்டுத் துறைகள் மற்றும் நிதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள விதம் யாது;

(v) முதலீடு செய்யும் போது சந்தை ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(vi) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கருத்திட்டத்தின் நிதியைச் செலவிடுவது தொடர்பில் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதா;

(ii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

(iii) பெறுகை மற்றும் நிதி வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டுள்ளனவா;

(iv) இன்றேல், அத்துறைகள் யாவை;

(v) ஒப்பந்ததாரர்களுக்கு செலுத்தப்பட்டுள்ள கொடுப்பனவுகள் குறித்த விபரங்களைச் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) கருத்திட்டத்திற்கான கிரயம் மற்றும் நிறுவனத்தின் சொத்துக்களை ஒப்பிடும் போது நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறாயின், அந்த நிதித்தொகை யாது;

(iii) இது நிறுவனத்தினால் தாங்கிக்கொள்ளக்கூடிய மட்டத்தில் உள்ளதா;

(iv) கருத்திட்டத்திற்கான மேற்பார்வை உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா;

(v) இக்கருத்திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா;

(vi) அதன் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளனவா;

(vii) இத்திட்டம் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2054/2026

கௌரவ சட்டத்தரணி சரத் குமார,— கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின் வருடாந்த நன்னீர் மீன் உற்பத்தி எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி உற்பத்திக்காகப் பங்களிப்புச் செய்யும் குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி மாவட்டத்தில் நன்னீர் மீன் உற்பத்திக்காக இனப்பெருக்க நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி நிலையங்கள் யாவையென்பதையும்;

(v) மடுல்ல பிரதேச செயலாளர் பிரிவின், அளுகல்கே கிராம அலுவலர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 'முத்துகண்டிய நன்னீர் மீன் இனப்பெருக்க நிலையத்தின்' மதிப்பீட்டுச் செலவு எவ்வளவென்பதையும்;

(vi) மேற்படி நிலையம் நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் மொனராகலை மாவட்டத்தில் நன்னீர் மீன் உற்பத்தியை விரிவுபடுத்துவதற்கான இனப்பெருக்க நிலையங்களின் எண்ணிக்கை போதுமானதாக இருக்குமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இங்கினியாகலையில் அமைந்திருக்கும் சேனநாயக்க சமுத்திரத்திலுள்ள மீன்பிடி இறங்குதுறைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நீர்த்தேக்கத்தின் பதுலுவெல பிரதேசத்தில் மீன்பிடி இறங்குதுறை ஒன்றை ஆரம்பிப்பதற்காக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2102/2026

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பௌத்த கோவிலுடைமைகள் கட்டளைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட வருடம் யாதென்பதையும்;

(ii) மேற்படி கட்டளைச் சட்டம் தற்போதும் அமுலிலுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கட்டளைச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதன் முக்கிய குறிக்கோள் யாதென்பதையும்;

(iv) இலங்கையில் மேற்படி கட்டளைச் சட்டத்தின் கீழ்வருகின்ற சமய நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சமய நிறுவனங்கள் வசமுள்ள காணிகளிலிருந்து வரி அறவிடுவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ள சட்டம் யாதென்பதையும்;

(ii) மேற்படி சட்டத்தின் மூலம் வரி அறவிடற்பாலதான வரம்பு, சதவீத அடிப்படையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) சமய நிறுவனமொன்றின் வசமுள்ள ஒரு காணியை குத்தகைக்கு விடக்கூடிய உயர்ந்தபட்ச காலப்பகுதி யாதென்பதையும்;

(iv) அவ்வாறான ஓர் ஒப்புதல் மீறப்படும் பட்சத்தில், அநீதிக்கு உள்ளாகும் திறத்தவரொருவருக்கு நீதியை நிலைநாட்டிக்கொள்ளக்கூடிய விதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2110/2026

கௌரவ கஞ்சன வெலிப்பிட்டிய,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிகரெட் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பில் ஆண்டுதோறும் பாரியதொரு வரித்தொகையை அரசாங்கம் அறவிடுகிறது என்பதை அறிவாரா?

(ii) ஆமெனில், கடந்த 03 ஆண்டுகளில் சிகரெட் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகள் மூலம் அறவிடப்பட்ட தொகை, ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாது;

(iii) சட்டரீதியாக சிகரெட் உற்பத்தி மற்றும் விற்பனை மீது வரி அறவிடப்படுகின்ற போதிலும், சிகரெட்டுகள் சட்டவிரோதமான முறைகளில் இறக்குமதிசெய்து விற்பனை செய்யப்படுவதை அறிவாரா;

(iv) ஆமெனில், சட்டவிரோதமான முறைகளில் சிகரெட் இறக்குமதி செய்யப்படுவதையும் விற்பனை செய்யப்படுவதையும் கட்டுப்படுத்துவதற்கு தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) சட்டவிரோதமாக சிகரெட் வியாபாரத்தில் ஈடுபடும் ஆட்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆவண செய்யப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2111/2026

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.03.28 ஆம் திகதிய, 2378 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகைக்கு அமைய ‘உப பொலிஸ் பரிசோதகர்’ பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) மேற்படி விண்ணப்பங்களில் தேர்வுக்காக நூறு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்பதையும்;

(iii) எச்.ஜீ. கவீஷ கீதாஞ்சன அமரசிங்க என்பவர், அவ்வாறு தேர்ந்தெடுக்கப் பட்டவர்களில் உள்ளடங்குவதாகவும் பயிற்சிக்கு வரும் போது அவர் எடுத்துவர வேண்டிய பொருட்கள் பற்றியும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) 2026.04.18ஆம் திகதி மற்றைய தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரிக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதிலும், அவருக்கு அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அ (iv) இற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) அவருக்கு இழைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படும் அநீதி தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2115/2026

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— பிரதம அமைச்சரும், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இயங்கு நிலையிலுள்ள தொழிற்பயிற்சி நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி நிறுவனங்களில் நடாத்தப்படும் கற்கைநெறிகள் யாவை;

(iii) மேற்படி கற்கைநெறிகளுக்கு கடந்த ஆண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட வலிமையிழந்த பயிலுநர்களின் எண்ணிக்கை, வலிமையிழப்பு வகை வாரியாக வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி கற்கைநெறிகளைத் தொடர்வதற்கு, வலிமையிழந்த பயிலுநர்களுக்கு பௌதீக ரீதியான அணுகல் மற்றும் தொடர்பாடல் வசதி செய்துகொடுக்கப் பட்டுள்ளதா;

(v) பயிலுநர்களை சேர்த்துக்கொள்வதற்குத் தேவையான தகைமைகளை வலிமையிழப்பு நிலை அல்லது அனைவரையும் உள்வாங்கிக் கொள்வதில் உள்ள தடங்கல்கள் காரணமாக பூர்த்திசெய்ய முடியாத பயிலுநர்களுக்கு கற்கைநெறிகளில் சேர்வதற்கு விசேட வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொழிற்பயிற்சி நிறுவனங்களின் பயிற்றுநர்களுக்கு வலிமையிழந்த சமுதாயத்துடன் செயலாற்றுவதற்குத் தேவையான விசேட திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளனவா?

(ii) பயிலுநர்களுக்கு அண்மித்த இடங்களில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிறுவனத்தில் தாம் விரும்பும் கற்கைநெறியைத் தொடர்வதற்குத் தேவைப்படும், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வலிமையிழந்தவர்களுக்கு நேயமுள்ள, நிறுவனக் கட்டமைப்பொன்றைக் கட்டியெழுப்புவதன் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளும் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2124/2026

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிவுகளின் எண்ணிக்கை;

(ii) தற்போது அப்பிரிவுகளில் பணியிலீடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை;

(iii) அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பிரிவுகளின் எண்ணிக்கை;

(iv) மேற்படி மாவட்டத்தில் தற்போது பணியிலீடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை;

யாதென்பதை அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பதவியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(ii) இன்றேல், மேற்படி பதவியை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2026 ஆகஸ்ட் 05, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

660/2025

கௌரவ ரோஹண பண்டார,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இலங்கையின் திரவப் பால் உற்பத்தி ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) அக்காலப்பகுதியில் உள்நாட்டு பால் தேவை, இறக்குமதி செய்யப்பட்ட பாலின் அளவு மற்றும் அதற்காக செலவிடப்பட்ட தொகை ஆகிய விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) திரவப் பாலில் தன்னிறைவடைவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

985/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் பயிற்சிகளை வழங்கியதன் மூலம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஈட்டிய வருமானம் யாதென்பதையும்;

(ii) மேற்படி வருமானம் ஈட்டப்படும் வழிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியினுள் பணியகத்தில் பயிற்சியைப் பெற்று வெளிநாடு சென்ற பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் பயிற்சியைப் பெறாமல் வெளிநாடு சென்ற பணியாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) முதன்முறையாக வெளிநாடு செல்லும் ஒவ்வொரு பணியாளருக்கும் பணியகத்தின் மூலமான பயிற்சியை கட்டாயமாக்குவது முக்கியமானதாக அமைவதால், அது தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1634/2025

கௌரவ சாமர சம்பத் தசநாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முப்படையினுள் நிரந்தர மற்றும் தற்காலிக சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) கடந்த 05 ஆண்டுகளுக்குள் அவர்களுக்கு இராணுவ சேவையிலிருந்து சட்டரீதியாக விலகுவதற்கு பொதுமன்னிப்புக் காலம் வழங்கப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அப்பொது மன்னிப்புக் காலங்களில் சட்டரீதியாக இராணுவ சேவையிலிருந்து விலகிக்கொண்ட இராணுவ வீரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2107/2026

கௌரவ (திருமதி) எம்.ஏ.சீ.எஸ். சத்துரி கங்கானி,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உடவளவை தேசிய பூங்காவிற்கும் லுணுகம்வெஹெர தேசிய பூங்காவிற்கும் இடையில் உள்ள யானை வழித்தடம், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதி யாது;

(ii) மேற்படி வழித்தடத்தின் இருமருங்கிலும் பாதுகாப்பு மின்சார வேலி அமைக்கப்பட்ட திகதி யாது;

(iii) மேற்படி மின்சார வேலியை அமைப்பதன் முக்கிய நோக்கம் யாது;

(iv) யானை பாதுகாப்பு வேலியை அமைப்பதற்குச் செலவிடப்பட்டுள்ள மொத்தத் தொகை எவ்வளவு;

(v) 2018 ஆம் ஆண்டில் யானை பாதுகாப்பு வேலி இருக்கும் போதே அதிகாலை வேளையில் கிராமத்துக்குள் புகுந்த ஒரு யானை பாடசாலை மாணவரொருவரைக் கொன்றுள்ளதை அறிவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) யானை வழித்தடத்தின் இருமருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள மின்சார வேலியில் பலஹருவ கிராமம் உள்ளடங்கும் பகுதியில் பிரதான மின்சார வேலி தற்போது செயலிழந்துள்ளதென்பதை அறிவாரா?

(ii) மேற்படி மின்சார வேலியை அகற்றுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அந்த முடிவு எடுக்கப்பட்ட திகதி மற்றும் அதன் நோக்கம் யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2135/2026

கௌரவ (திருமதி) ஒஷானி உமங்கா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரகம, மில்லெனிய மற்றும் ஹொரனை பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குரிய காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) மேற்படி காணிகளுள் தற்போது வரை வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) காணிபெறுநர்களின் பெயர்ப் பட்டியலொன்றை வழங்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவுக்குரிய காணிகளுள் சட்டவிரோதமாக கைப்பற்றப்பட்ட அல்லது பயன்படுத்தப்பட்டு வரும் காணிகள் இனங்காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அக்காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iii) அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மேற்படி ஒவ்வொரு பிரதேசச் செயலகப் பிரிவிலும்;

(i) குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள ஆணைக்குழுவுக்குரிய காணிகளின் அளவு மற்றும் அதற்காக வருடாந்தம் அறவிடப்படும் குத்தகைக் கட்டணம்;

(ii) குத்தகை ஒப்பந்தம் காணப்படுகின்றபோதும் குத்தகைக் கட்டணம் அறவிடப்படாத காணிகளின் அளவு;

(iii) குத்தகைக்கு வழங்கக் கூடிய பிணக்கற்ற காணிகளின் அளவு;

வெவ்வேறாக யாதென்பதை மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2026 ஆகஸ்ட் 06, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

368/2025

கௌரவ அஜித் பி. பெரேரா,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'அபி வெனுவென் அபி' நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) அந்நிதியத்திலுள்ள பணத்தொகை யாது;

(iii) மேற்படி நிதியத்தின் பணம் செலவிடப்பட்டுள்ள செயற்பாடுகள், அதனுடன் தொடர்புடைய பயனாளிகள் மற்றும் செலவிடப்பட்டுள்ள பணத்தொகை ஆகியன வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி நிதியத்தை மிகவும் பயனுள்ள வகையில் முன்னெடுத்துச் செல்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

463/2025

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.01.01 தொடக்கம் 2024.12.31 வரை இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி அளவில் சுத்திகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்ட அளவிற்காக 18% வெட் வரி மற்றும் 2.5% சமூகப் பாதுகாப்பு வரி என்பன இறக்குமதி செய்த நிறுவனங்களினால் செலுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், செலுத்தப்பட்டுள்ள மொத்த வரி எவ்வளவென்பதையும்;

(iv) செலுத்த வேண்டியுள்ள நிலுவை வரி எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி நிலுவை வரியை அறவிடுவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(vi) மேற்படி நிறுவனங்களுக்கு வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

471/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— டிஜிட்டல் பொருளாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கை டெலிகொம் (SLT) ஈட்டிய மொத்த வருமானம் வருடாந்த அடிப்படையில் எவ்வளவு என்பதையும்;

(ii) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இலங்கை டெலிகொம் ஈட்டிய மொத்த இலாபம் வருடாந்த அடிப்படையில் எவ்வளவு என்பதையும்;

(iii) மேலே (i) மற்றும் (ii) தொடர்பான மொத்த நேரடி மற்றும் மறைமுக வரிகள் எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்;

(iv) இலங்கை டெலிகொமில் பணிக்கமர்த்தப்பட்ட பணியாட்டொகுதி உறுப்பினர் களின் மொத்த எண்ணிக்கை மற்றும் கடந்த 05 ஆண்டுகளுக்கான சம்பளம் மற்றும் ஊதியங்களுக்காக ஏற்பட்ட மொத்த வருடாந்தச் செலவு எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்;

(v) ஐந்தொகையில் பிரதிபலிக்கும் இலங்கை டெலிகொமின் மொத்த சொத்துப் பெறுமதி மற்றும் தொடர்புடைய சந்தைப் பெறுமதி எவ்வளவு என்பதை வெவ்வேறாகவும்;

(vi) இலங்கை டெலிகொமின் மூன்று பிரதான பங்குதாரர்கள் யார் என்பதையும்;

(vii) அரசாங்கத்திடமுள்ள பங்குகளின் மொத்தப் பெறுமதி இலங்கை ரூபாவில் எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

599/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பொது மருத்துவரொருவருக்கும் விசேட மருத்துவ நிபுணரொருவருக்கும் அரசாங்கத்தினால் செலுத்தப்படும் மாதாந்த ஊதியம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) அரசாங்க சேவையில் இருக்கும் போது லீவு பெற்று அல்லது சேவையிலிருந்து விலகி இன்றளவில் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள பொது மருத்துவர்கள் மற்றும் விசேட மருத்துவ நிபுணர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) 2020 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஆம் ஆண்டு வரை வருடாந்தம் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள மருத்துவர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அவ்வாறு வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(v) இன்றளவில் வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக விண்ணப்பித்துள்ள மருத்துவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) மருத்துவர்களின் ஊதியங்களை உயர்த்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(vii) மருத்துவர்கள் நாட்டை விட்டுச் செல்வதை குறைப்பதற்கு தற்போதைய அரசாங்கத்திடமுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

705/2025

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுனைடட் பெற்றோலியம் லங்கா (United Petroleum Lanka) கம்பனி தமது செயற்பாட்டு நடவடிக்கைகளை இலங்கையில் ஆரம்பித்த திகதி யாது;

(ii) மேற்படி கம்பனி இலங்கையில் மேற்கொள்ளும் மொத்த முதலீட்டின் பெறுமதி எவ்வளவு;

(iii) மேற்படி கம்பனியுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் யாவை;

(iv) செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக மேற்படி கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை யாது;

(v) மேற்படி கம்பனி இலங்கையில் தமது செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறுத்தக் காரணமான விடயங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

886/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2017.01.01 திகதி தொடக்கம் 2025.03.31 திகதி வரையான காலப்பகுதியில், மட்டக்களப்பு மாவட்டத்தின், ஏறாவூர்ப்பற்று, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவில், அரசாங்கத்தினால் 'அளிப்புப் பத்திரங்கள்' அல்லது 'காணி உரிமப் பத்திரங்கள்' ஊடாக வழங்கப்பட்ட அரச காணிகளில் மக்கள் வசிக்கின்றார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ்வாட்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் ஏற்புடைய தகவல்கள் என்பன யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1037/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களு கங்கை - மொரகஹகந்த நீர்த்தேக்கக் கருத்திட்டம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் குடியேற்றப்பட்டுள்ள லக்கல தேர்தல் தொகுதியில் வாழும் மக்கள் போதிய நீர் வசதியின்றி சிரமங்களுக்கு உள்ளாவதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அம்மக்கள் முகங்கொடுத்துள்ள நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1761/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— வீடமைப்பு, நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்காக நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுக் கடன் மற்றும் வீட்டு உதவி கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தின் மூலமும் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்திற்காகவும் ஆண்டு வாரியாக ஒதுக்கப்பட்ட நிதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களின் கீழ் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டங்களின் கீழ் 2019 ஆம் ஆண்டு நிறைவடையும்போது நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டிருந்த வீடுகள் மற்றும் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படாத வீடுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(vi) நிர்மாணப் பணிகளை நிறைவு செய்ய முடியாமல் போனமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2137/2026

கௌரவ நிஷாந்த பெரேரா,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2000 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவால் காலி மாவட்டத்தில் வழங்கப்பட்ட காணிகளின் அளவு ஹெக்டயார்களில் எவ்வளவென்பதையும்;

(ii) பிரதேச செயலகப் பிரிவு வாரியாக, மேற்படி காணிகளின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) காணிகளை வழங்கும்போது பின்பற்றிய நிபந்தனைகள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி நிபந்தனைகளை மீறிய காணி பெறுநர்கள் தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2138/2026

கௌரவ தினேஷ் ஹேமந்த,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த பெரிய வெங்காய நுகர்வு மெற்றிக் தொன்களில் எவ்வளவு என்பதையும்;

(ii) உள்நாட்டுப் பெரிய வெங்காய உற்பத்தியின் மூலம் அந்நுகர்வில் எவ்வளவு பங்கு பூர்த்தி செய்யப்படுகிறது என்பதையும்;

(iii) எஞ்சிய தேவையைப் பூர்த்தி செய்வதற்கு ஆண்டுதோறும் இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தின் அளவு மெற்றிக் தொன்களில் எவ்வளவு என்பதையும்;

(iv) உள்நாட்டுப் பெரிய வெங்காய அறுவடைக் காலப்பகுதியில் உள்நாட்டுப் பெரிய வெங்காய செய்கையாளர்களின் வருமானம் மற்றும் சந்தையைப் பாதுகாப்பதற்காக, இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பெரிய வெங்காயத்தின் மீது விதிக்கப்படும் வரி தொடர்பாக அமைச்சின் தலையீடுகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2026 ஆகஸ்ட் 07, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

784/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில ஆண்டுகளுக்கு முன்னர் நகர மண்டபத்திலிருந்து கடவத்தை வரை 193 ஆம் வீதி இலக்கத்தைக் கொண்ட பேரூந்துச் சேவையொன்று இயக்கப்பட்டதென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி பேரூந்துச் சேவை இயக்கப்படுவதில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மட்டக்குளிய மற்றும் கடவத்தை ஆகிய டிப்போக்களிலிருந்து தலா ஒரு இபோச பேரூந்து வீதம் ஈடுபடுத்தி மேற்படி பேருந்துச் சேவையை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

909/2025

கௌரவ முஜிபுர் ரஹ்மான்,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் கடவுச்சீட்டொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு செலுத்த வேண்டிய கட்டணம் எவ்வளவு என்பதையும்;

(ii) கடவுச்சீட்டொன்றைத் தயாரிப்பதற்கு செலவாகும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) பழைய கடவுச்சீட்டில் மற்றும் புதிய கடவுச்சீட்டில் உள்ள பக்கங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அப்பக்கங்களின் எண்ணிக்கையை மாற்றுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) புதிய கடவுச்சீட்டின் பாதுகாப்பு வழிமுறையில் சிக்கல் நிலவுவதை அவர் அறிவாரா என்பதையும்;

(vi) புதிய கடவுச்சீட்டில் அநேகமான பிழைகள் காணப்படுவதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(vii) ஆமெனில், அவற்றை சரிசெய்வதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) E-Passportகளை அச்சிடுவதற்காக விலைமனு கோரி, தெரிவு செய்த நிறுவனத்திடம் சாதாரண கடவுச்சீட்டுக்களை அச்சிடுவதற்கு வழங்கியுள்ளமை பற்றி அவர் அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்திடமிருந்து விலைமனு கோராமல், சாதாரண கடவுச்சீட்டை அச்சிட வழங்கியமை, ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிமுறைக்கு முரணானதல்லவா என்பதையும்;

(iii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

946/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மை (தனியார்) கம்பெனிக்கு 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை கிடைக்கப் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு வெற்றிடங்களின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி வேலைவாய்ப்புகளுக்கு அதிகமான ஆட்களை அனுப்ப முடியாமல் போனமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) வேலைவாய்ப்புகள் மூலம் உச்சபயனைப் பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1066/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் தெங்குப் பயிர்ச்செய்கையினைத் தாக்கும் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) பாதிக்கப்பட்ட தெங்குப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு இழப்பீடு/ நிதி உதவி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) அதன் பரவலுக்கான காலநிலைக் காரணங்கள் குறித்து சுற்றுச்சூழல் மதிப்பீடுகள் நடத்தப்பட்டனவா;

(iv) உயிரியல் கட்டுப்பாட்டு முறையாகிய ஒட்டுண்ணிக் குளவியைப் *(Encarsia guadeloupe)* பெற்றுக்கொண்ட பிராந்தியங்களின் எண்ணிக்கை யாவை;

(v) அத்தகைய தலையீட்டின் செயல்திறன் குறித்து;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அது ஏனைய மாவட்டங்களுக்குப் பரவுவதைத் தடுப்பதற்கு ஒரு தேசிய செயல்திட்டம் உள்ளதா;

(ii) உயிரியல் கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் மாற்று சிகிச்சைகள் தொடர்பான விரிவாக்க நிகழ்ச்சித்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றனவா;

(iii) தெங்குப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான பூச்சிக் கட்டுப்பாட்டிற்காக, அடுத்த வரவுசெலவுத்திட்டத்தில் அவசரகால நிதி ஒதுக்கீடு செய்யப்படுமா;

(iv) புதிய கட்டுப்பாட்டு முறைகளை உருவாக்குவதற்கான ஆராய்ச்சித் திட்டங்கள் நடைபெற்று வருகின்றனவா;

(v) இதை ஒரு விவசாய இடராக அறிவித்து, அதனைத் தீர்ப்பதற்கு அமைச்சுகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1363/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஏதேனும் பாடசாலையொன்றில் 08 வருடங்களுக்கும் அதிகமான காலம் சேவையாற்றி வருகின்ற அதிபர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு மாகாண ரீதியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அதிபர் ஒருவர் ஒரே பாடசாலையில் தொடர்ச்சியாக 08 வருடங்களை விட அதிகமான காலம் சேவையாற்றுவதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் யாவையென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டு மிகை ஊழியர் அடிப்படையில் அதிபர்களாக உள்ளீர்க்கப் பட்டவர்களுக்கு பதவியுயர்வு வழங்கப்பட்டுள்ளபோதும், அவர்களுடைய சேவைக்கான நிர்வாகக் கொடுப்பனவுகள் வழங்கப்படாததை அறிவாரா என்பதையும்;

(iv) அதற்கான தடைகள் யாவையென்பதையும்;

(v) பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு, மிகை ஊழியர் அடிப்படையில் சேவையாற்றும் அதிபர்கள் விண்ணப்பிப்பதற்குள்ள தடைகள் யாவையென்பதையும்;

(vi) 08 வருடங்களுக்கும் அதிகமாக ஒரே பாடசாலையில் மிகை ஊழியர் அடிப்படையில் சேவையாற்றும் அதிபர்களுக்கு, இடமாற்றம் வழங்குவதற்குள்ள இயலுமை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1364/2025

கௌரவ எம். எஸ். உதுமாலெப்பை,— கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கடந்த 30 வருடங்களாக சுமார் 18,000 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட்டுள்ளதோடு, இதுவரையில் அவர்களுக்கு எவ்விதமான பதவியுயர்வுகளும் வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சினால் மேற்படி சேவைக்கான பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்படி சேவையில் தற்போது நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1378/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி சமிந்திரானி கிரிஎல்லே,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினதும் அச்சங்கங்களுக்குச் சொந்தமான கிராமிய வங்கிகளினதும் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அவற்றுள் பல்வேறு நிதி மோசடிகள் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள சங்கங்கள் மற்றும் கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி மோசடிகள் மற்றும் ஊழல்கள் குறித்து விசாரிப்பதற்காக மத்திய மாகாண ஆளுநரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அக்குழுவின் அங்கத்தவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி மோசடிகள் மற்றும் ஊழல்கள் தொடர்பில் குழு வழங்கிய விதப்புரைகள் மற்றும் குறித்த விதப்புரைகளை நடைமுறைப்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1659/2025

கௌரவ சானக மாதுகொட,— பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இறுதியாக நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த போட்டிப் பரீட்சையினூடாக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மொத்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பதவிக்காக நேர்முகத் தேர்வின் போது தகைமை பெற்ற மற்றும் தற்பொழுது கடமைகளை பொறுப்பேற்றுள்ள எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆட்சேர்ப்பின் பின்னர் தற்பொழுது அப்பதவியில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி வெற்றிடங்களுக்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்றுள்ள பரீட்சார்த்திகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கு உத்தேசித்துள்ளீர்களா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1826/2026

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வன்னி தேர்தல் தொகுதிக்குரிய ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படும்,

(i) சிறிய மற்றும் பாரிய நீர்ப்பாசனக் குளங்களின் எண்ணிக்கை;

(ii) நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் குளங்களின் எண்ணிக்கை;

(iii) நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாத குளங்களின் எண்ணிக்கை;

(iv) வயற் காணியின் அளவு;

ஆகிய விபரங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) (அ)(iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள குளங்கள், நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி குளங்களை புனரமைத்து, அக்குளங்களுக்கு கீழே அமைந்துள்ள காணிகளை பயிர்ச்செய்கை நடவடிக்கைளுக்காக காணிகளற்ற குடும்பங்களுக்கு வழங்குவதற்கு சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்காக எடுக்கும் காலம் எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1829/2026

கௌரவ லால் பிரேமநாத்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிராந்திய ஊடகவியலாளர்கள் தங்கள் செலவில் அறிக்கையிடும் செய்திகளுக்காக ஊடக நிறுவனங்களால் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவு குறித்து அறிவாரா;

(ii) அவ்வாறாயின், அக்கொடுப்பனவுகள் போதுமானவை அல்ல என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(iii) இவர்களுக்காக உறுதியான குறைந்தபட்ச கொடுப்பனவொன்றை அறிமுகஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(iv) பிராந்திய ஊடகவியலாளர்களின் புலனாய்வுச் செய்திகள் ஊடக நிறுவனங்களால் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தணிக்கை செய்யப்படுவதை அல்லது திரிபுபடுத்தப்படுவதைத் தடுப்பதற்காக தற்போதுள்ள வேலைத்திட்டம் யாது;

(v) பிராந்திய ஊடகவியலாளர்களின் புலனாய்வுச் செய்திகளுக்காக, ஊடக நிறுவனங்கள் மாத்திரம் விருதுகளைத் தட்டிச்செல்வதை நிறுத்துவதற்கு இடையீடு செய்வாரா;

(vi) பிராந்திய ஊடகவியலாளர்கள் வழங்கும் தகவல்கள் மற்றும் காணொளிகள் காரணமாக இவர்கள் குற்றம் சாட்டப்படுவதை அல்லது பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்படுவதைத் தடுப்பதற்காக எடுக்கவிருக்கும் நடவடிக்கை யாது;

(vii) பிராந்திய ஊடகவியலாளர்கள் எதிர்கொள்ளும் அநீதிகள் சம்பந்தமாக ஆராய நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?